# பேசும் மனம்

--- ஜெயசேகரன் ஜென்



தொகுப்பு: அனுத்தமா

சில நேரங்களில் மனம் பேசிவிட்டு அமைதியாகி விடும். பெரும்பாலும் இந்த அமைதி, மனம் பேசியதை நாம் கேட்காததால் ஏற்படும் அல்லது கேட்பதால் ஏற்படும். மனம் பேசுவதை கேட்பது என்பது நம்மில் எத்துணை பேருக்குள் நடக்கிறது என்பது கேள்விக்குறியே. மனதிற்கு புத்தி சொல்லும் மனிதர்களே இங்கு அதிகம். இப்படி ஒரு சூழ்நிலையில், அந்த மனதை முழுவதுமாக பேச விட்டால் என்னதான் சொல்கிறது என்று கவனிப்போம் என நான் முடிவெடுத்த போது பேசியவைதான் இந்த " பேசும் மனம் ".

பொதுவாக ஒன்றிரண்டு பார்வைகளை அல்லது சில பார்வைகளை ஒரு தலைப்பில் எழுதி விட்டு, தினசரி பயணத்தில் இந்த பார்வைகளை மறந்து விடுதல் யதார்த்தமானது. ஆனால் அனுத்தமா என்கிற ஒரு நட்பு ஒவ்வொரு பார்வைக்கும் இலக்க அடைக்கலங்களை கொடுத்து வரிசைப்படுத்த, ஊக்கத்தை தாராளமாய் வழங்கும் பயிற்சியாளரான நான், அந்த நட்பு இலக்கங்களால் ஊக்கம் பெரும் பயிற்சியாளரானேன். 100 என்ற இலக்கை நோக்கி பயணித்தால் என்ன என்ற கேள்வியோடு இந்த பார்வை தேர் நகர்ந்ததில் அந்த நட்புக்கு என் நன்றிகள்.

தங்களது பார்வைகளை பதிவுகளாய் அனுப்பிய சின்ன ராஜா, பூமாலை, மீனா,அனுத்தமா மனிதங்களுக்கு என் மனம் நிறை நன்றிகள். உங்களின் பின்னூட்டங்கள் கொடுத்த செல்ல அறைகளில் இதயம் நிறைகிறது. சுட்டிக்காட்டியவற்றில் இருந்து பாடம் கற்றுக்கொள்கிறேன்.

கிருத்திகா தரன் என்னும் ஒரு சோழ பிசிராந்தையார் நட்பு கொடுக்கும் நேர்மையான பின்னூட்ட உற்சாகம், எழுத்தில் இன்னும் ஒரு அங்குலம் முன்னேறுவோம் என்ற சிந்தனையை பரர்வையாக, கேள்வியாக எனக்குள் வைத்துக்கொண்டே இருக்கிறது. இந்த உலகில் உற்சாகம் கெடுக்கும் மனிதர்களுக்கு மத்தியில், உற்சாகம் கொடுக்கும் மனிதமாக பயணிக்கும் அவர்களுக்கு என் நன்றிகள்.

ஒரு பார்வையை பகிர்ந்ததும், என் செய்திப் பெட்டிக்குள் தங்களின் அனுபவங்களை பகிர்ந்த முகநூல் நட்புக்கள் எனக்குள் தினசரி அதிர்வுப் பூக்களை தெளித்துக்கொண்டே இருந்தது என் எழுத்துக்களுக்கான உற்சாக மதுரம். அனைவர்க்கும் என் நன்றிகள்.

சிறுவயதில் நான் தொலைத்த எனக்கு மிகவும் பிடித்த ஒரு சக மாணவியின் புகைப்படம், யதேச்சையாக என் அறைகளை சுத்தம் செய்யும்போது மீண்டும் கிடைத்தால் கிடைக்கும் மனநிலை என்னவோ அப்படி ஒரு மனநிலை எனக்கு. பள்ளிக்கூடத்தில் 'ஆதலினால்' என்ற ஒரு கவிதை தொகுப்பை எழுதி, பெண் ஆசிரியை பாராட்டியதில் மகிழ்ந்து, ஆண் ஆசிரியர் கொடுத்த பிரம்படியில் அதிர்ந்து ( படிக்க வேண்டிய நேரத்தில் இதெல்லாம் என்ன ? ) கிழித்துப் போட்ட அந்த தொகுப்பு இன்னும் மனதிற்குள் வாழ்வதை இப்போதும் உணரவைத்த இயற்கைக்கு என் நன்றிகள்.

நான் எழுதியவை கவிதை தொகுப்பில் வருமா, முதலில் அவை கவிதையா என எனக்கு தெரியாது. என்னை பொறுத்தவரை கவிதை என்பது பெரும்பார்வைகள். பெருஞ்சொற்கள். பெருங்கடல். அங்கு கரையில் நின்று கொண்டு வலை வீச முயற்சிக்கும் ஒரு வார்த்தை மீனவன் நான். என் முயற்சிகளில் திருத்தம் இருப்பின் சுட்டிக்காட்டவும். திருத்திக்கொள்கிறேன். கற்பதும் பகிர்வதும் திருத்திக்கொள்வதும் மீண்டும் கற்பதும் பகிர்வதுமாய்... என் இருப்பு நகர்கிறது. அந்த நகர்வில் உங்களை நான் சந்திப்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. நான் எப்போதும் சொல்வது போல் என் வாகனத்தின் சக இருக்கையில் உங்களின் பின்னூட்டங்கள் என்னுடன் பயணிக்கும். ஆம். பயணங்கள் முடிவதில்லை.

நன்றிகளும் வாழ்த்துக்களும்.

**ஜெயசேகரன் ஜென்**

## வாசகர் பார்வையில்...

- அந்த மனம் பேசத் துவங்கிய போது அதை வழக்கமான ரசிப்புடன் கடந்தேன்.

<u>பேசும் மனம் 6 :</u>
அந்த பறவை பறந்த போது என்
பார்வையில் இருந்து விலகியது ...
என் எழுத்துக்களில் இருந்து அல்ல...
என்னுடன் இப்போது
நீயும் அந்த பறவையை
எழுத்துக்களில் பார்த்து விட்டதில்
மன மகிழ்வு எனக்கு ..
ஆக... பறக்க தயாரா நீ ?
என்னுடன் ?


#தயாரெனில்வா

இந்த பதிவு என்னை கடக்க விடாமல் அந்த மனதுடன் பறக்க தூண்டியது. அன்று முதல் நானும் உடன் பயணிக்க தயாரானேன்.

இந்த 28 நாட்களில் அந்த மனம் என்னை நிறைய யோசிக்க வைத்தது, இயற்கையை நேசிக்க வைத்தது, வாழ்க்கையை ரசிக்க கற்று கொடுத்தது.

பல நாட்கள் பல்வேறு பணி காரணமாக மனம் மௌனமான பொழுது விடாமல் துரத்தி பேசச் சொல்லி வற்புறுத்தி இருக்கிறேன். Sorry about that.

நான் மீண்டும் படிப்பதற்காக இந்த பதிவுகளை சேகரிக்க ஆரம்பித்தேன். முதல் 15 பதிவுகளை தொகுத்து PDF மூலம் அவருக்கு அனுப்ப, அப்பொழுது தோன்றியது தான் இந்த எண்ணம்.



நான் ரசித்த இந்த பேசும் மனம் பதிவுகள் கண்டிப்பாக அனைவருக்கும் பிடிக்கும். JSZ ன் இந்த பயணத்தில் அவருடன் சேர்ந்து பயணிப்பதும், கற்பதும் தொடர விரும்புகிறேன்.

நன்றி
அனுத்தமா

- "பேசும் மனமோ "ஒரு நூறு-அவை
அலசும் கருத்தோ நூறு நூறு-அவை
வீசும் மணமோ தாறு மாறு-இதை
வாசிக்கும் வாய்ப்போ பெரும் பேறு"

நன்றி
மீனா

- பயணம் தான் வாழ்க்கை என்பதை உறுதி செய்கிறது இந்த 'பேசும் மனம' கவிதைகள் .

அது வழிப்பயணங்கள் மட்டும் அல்ல தனக்கும் மனதிற்குமான பயணமாக இருக்கலாம் .

தன் பயணத்தின் தொடக்கத்தை உயிரில் உருவாக்கி மனதில் தொடங்கி சக உயிராய் மனிதன் , மண் , மரம் , காற்று , வெளி என்று ஒன்று கலந்து அதனுள் புகுந்து பயணமாகிறது இந்த கவிதை தொகுப்பு .

இவரது கவிதை தொகுப்பு படிக்கும்போது ஆழ்மனதில் ஒரு விதமான பரவசம் வருகிறதை உணர முடிகிறது. எதனால் இந்தப் பரவசம்? கவிதையின் வேர் எங்கிருக்கிறது ?

வாழ்க்கை இப்படி தான் என்று அதை ஏற்றுக் கொண்டு அதை கொண்டாடுவதாலா?

கற்பனை கலக்காத யதார்த்த உண்மையாலா ? எதில் உள்ளது அந்த மைய்ய புள்ளியின் மெய்யுணர்வு ?

ஆசையானாலும் கூட நியாயமான யதார்த்தமாக இருந்தால் மட்டுமே அது அடி ஆழமான மனதில் முகிழ்த்து பூத்து நிற்கும ஆனந்த பூவாகி மணக்கும் என்பதை என் படகு என்ற இந்தக் கவிதை மூலம் வாழ்க்கையின் சூட்சுமத்தை உரைக்கிறார் .

என் படகு

நீர் குமிழி ஆசைகளை

ஏற்றிக் கொள்ளாததால்

எங்கும் எதனாலும் கவிழாமல்

யதார்த்த நதியில் மிதக்கிறது

இதுவே முதல் தகுதி

முதிருமுடல் முதிராமனம் கவிதை மூலமாக நிதர்ஸனம் உலுக்கி போட்ட உணர்வை கொண்டு வருகிறது.

ஜெய் அவர்களின் பெரும்பான்மையான கவிதையில் அவருடன் பயணம் செய்யபவர் அல்லது அவரோடு பயணம் செய்ய இருப்பவர் யாராக இருக்கும் என்ற கேள்வி அடிக்கடி வருகிறது

நம்மை இருவராக பிரித்துக் கொண்டால் ஒன்று நான் மற்றொன்று என் மனம் என்று இரண்டாக பிரியும்

நான் என்ற தன்னுடன் தன்னுடைய மனதை அன்பாக , பக்குவமாக , ஆசையாக , நைச்சியமாக தன்னுடன் அழைத்து போகவும் , தன் வாழ்க்கை பயணத்தில் உறுதுணையாக ஆக்கியது போல உணர்வு எனக்கு ஆம் அப்படி தான் இருக்கும் மனதை வென்றவரால் மட்டுமே அதை தன் வழிக்கு கொண்டு வர முடியும்.தன்னை ஏற்றுக் கொண்ட மனம் எல்லாவற்றையும் அரவணைத்துக் கொள்கிறது .


//இரவு பெய்யும் மழையில் // என்ற கவிதையில் இதமாய் துயில் கொள்ளும் வேளையில் காலையில் பார்த்த பிச்சைக்காரன் என்னவாயிருப்பான் என்ற எண்ணத்தில் மனிதாபிமானம் பரிமளிக்கிறது.

//விழியின் அசைவில்

விழும் பிம்பங்களும்

அசைந்தாடுமோ?//

இந்தக் கவிதை ஒரு கேள்வியா? அதிசயமா ? என்று கேட்க தூண்டுகிறது . பூமி சுழலில் அசைவது தெரியாமல் இருக்கும் மலையைப்போல எனலாமா ? நல்ல விசாரம் .



//குளத்தில் விழும் துளி

பொது

பூவின் இதழில் விழும் துளி

தனி

குளத்தில் பூவில் இதழில்

விழும் துளி

பொதுவில் தனி

வாழ் பொதுவில்

தனியாக வாழ் //

பொதுவில் வாழ்ந்தாலும் தனித்திரு என்பதற்கான விளக்கத்தை இதை விட எளிதாக சொல்லிவிட முடியாது

கவிதை ஒவ்வொன்றும் நமக்குள் பல பரிமாணங்களை கொண்டு வருகிறது .

பறக்க நினைக்கும் பறவையின் சுதந்திரம் வண்ணத்து பூச்சியின் ரீங்காரம் கேட்கும் சுகம் இவற்றை தன் நுண்ணிய பார்வையால் கவிதை வடித்திருக்கிறார் .

//நம்பிக்கை துவண்டு நிற்கும்போது துளிர்க்கும் இன்னொரு
நம்பிக்கை அத்தனை நம்பிக்கைகளையும்
உயிரூட்டுவதை விட
வேறு என்ன அதிசயம்
இந்த உலகில் இருக்க முடியும் ?//

என்று தனக்கு உள்ள நம்பிக்கையின் ஆளுமையை நமக்கும் மடை மாற்றம் செய்கிறார் .
ஆர்ப்பரிக்கும மனதின் ஓய்வு வேளையில் கேட்கும் மெல்லிய இசை போல இயற்கை காதல் இங்கே மெல்லிய நாதமாக இழைகிறது .

இயற்கையின் மடியில் அமர்ந்து எழுதிய இந்த' பேசும் மனதை '
பிரபஞ்சம் தன் இயற்கை கரத்தால் வாரி அணைத்துக்கொள்கிறது .

தன்னை, தன் மனதை ஆழமாக நேசிக்க தெரிந்த ஒருவரால் தான் இந்த உலகையும் நேசிக்க முடியும் . இயற்கை இரங்கி வந்து விளையாடும் என்பதை ஒவ்வொரு கவிதையின் ஊடாக இழையோட விட்டு இருக்கிறார் ஜெய் அவர்கள் . அது மழையாக இவரை நனைக்கிறது . வெப்பமாக உலர வைக்கிறது , ஒளி வீசும் கதிராக ஒளிர்கிறது . வாகனத்தில் இடது புற இருக்கையில் அமர்ந்து கதை பேசுகிறது . கைகோர்த்து நடக்கிறது , மழையால் நனைய வைக்கிறது , கடந்த கால வசந்தங்களை நினைவூட்டுகிறது , நிகழ்கால நிதர்ஸனங்களில் துய்க்க வைக்கிறது . அப்பப்பா . . . . எத்துணை செய்கிறது இந்த இயற்கை ? இயற்கையுடன் "பேசும் மனம்" வேண்டும் என்ற ஆவலை இந்த கவிதை தொகுப்பு உறுதி படுத்துகிறது .

நன்றி
பூமாலை
கோவை

- பேசும் மனம்


மனதோடு பேசுதல் வரம்....
ஒவ்வொரு முறை இங்கு மனம் பேசும் போதும் வெவ்வேறு கோணங்களில் புதிய பார்வைகள், வாசிக்கும் நமது மனங்களில் விரிகின்றது...
இயற்கை, மனிதம் என அத்தனையையும் உற்று உணரத்தூண்டுகின்றன ஒவ்வொரு பகுதியும்....பாடங்களாய்....

மனதோடு பேசுவது எனைப் பொறுத்தவரை அடிக்கடி நிகழா நிகழ்வு...
இனி மனதோடு பேச, பயிற்சி பெற்ற உணர்வை "பேசும் மனம்" தருவதை உணர முடிகிறது....

இனி நானும் பேசலாம் என் மனதோடும் சந்திக்கும் மனங்களோடும் முழு மனதோடு...!

நன்றிகள்...

சின்னராஜா.க
விருதுநகர்



## <u>பேசும் மனம்: 1</u>

அனைத்து காலங்களிலும்
மரத்தில் இருந்து
ஏதோ ஒன்று
விழுந்து கொண்டே இருக்கிறது..
அதே நேரத்தில்
மரமும் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

#விழுதலும்வளர்தலும்




*__பேசும் மனம் 2 :__*

*என் படகு*
*நீர்க்குமிழ் ஆசைகளை*
*ஏற்றிக் கொள்ளாததால்*
*எங்கும் எதனாலும் கவிழாமல்*
*யதார்த்த நதியில் மிதக்கிறது ..*
*பயணத்தில் பங்கெடுக்க*
*இதுவே முதல் தகுதி !*



<u>பேசும் மனம் 3 :</u>




இருந்த பொருட்களை
இல்லா உருவகம் செய்து
விளையாடி மகிழ்ந்தது
அந்த சிறு குழந்தை...

இல்லாத கடந்த காலத்தை
இப்போதைய உண்மையாய் நினைந்து
மீண்டும் அழ ஆரம்பித்தாள்
அந்த இளம்பெண்...
#முதிருமுடல்முதிராமனம்

பேசும் மனம் 4 :

அதன் அழுகையை
அதுவாகவே உரமாக்கும்
அதிசயத்தில் பிறந்த நீ
அழுவது ஆச்சரியமே ...
அந்த இடம் பூமி என நான்
அகத்தில் இருந்து உரைக்க வேண்டுமோ ?



**<u>பேசும் மனம் 5 :</u>**

*எந்த மிருகமும்*
*இல்லா அந்த மூங்கில் காடு*
*தனக்குள் விழும் காற்றினை*
*மிருக சத்தமாய் ஏவியது ...*
*பயமின்றி நடக்கும் நான்...*
*பக்கத்தில் என்னை பார்த்தபடி*
*பவ்யமாய் நடக்கும் நீ !*

#ஒருபுதுஉறவு



<u>*பேசும் மனம் 6 :*</u>

*அந்த பறவை பறந்த போது என்*
*பார்வையில் இருந்து விலகியது ...*
*என் எழுத்துக்களில் இருந்து அல்ல...*
*என்னுடன் இப்போது*
*நீயும் அந்த பறவையை*
*எழுத்துக்களில் பார்த்து விட்டதில்*
*மன மகிழ்வு எனக்கு ..*
*ஆக... பறக்க தயாரா நீ ?*
*என்னுடன் ?*
*#தயாரெனில்வா*



## <u>பேசும் மனம் 7:</u>

ஒவ்வொரு பகுதியும்
ஒவ்வொரு பக்கம்....
பூமி என்கிற இந்த புத்தகம்
படித்து முடிக்க
ஒரு பிறப்பு போதாது...
இன்னொரு பிறப்பு
மெய்யா பொய்யா தெரியாததால்
நீயும் வா ... பயணிப்போம்...
ஒரு பயணம் இரு பார்வை
அனுபவத்துடன் எனதிந்த
வாழ்க்கை முடியட்டும்.




*<u>பேசும் மனம் 8 :</u>*


*அசைந்த பூக்களை தாண்டி*
*அந்த பட்டாம்பூச்சி*
*அழகாய் என்னருகில் பறந்தபோது...*

*எனக்குள் பறந்த*
*எண்ணற்ற கற்பனை குதிரைகளுக்கு*
*எந்த கடிவாளமும் நான் போடவில்லை ...*
*என் கற்பனை குதிரைகளும்*
*எழும்பும் பட்டாம்பூச்சியை*
*தொடரவில்லை ...*
*எல்லாம் அதனதன் போக்கில்*
*யாருடைய அருகாமையும்*
*இன்றி தனித்தனியாய்*
*மகிழ்ந்தன .. சிரித்தன ...*
*இணைந்தன*
*-அதனதன் உலகத்தில் !*

*#பிம்பமகிழ்வுகள்*



பேசும் மனம்: 9




இவ்வளவு பெரிய உலகம்
எப்படி உன் முன்னால் வீடு
என்ற அடைமொழியில்
இருப்பாய் சுருங்கி விடமுடியும் ?

யதார்த்தமாய் மனிதனை படிக்கும்
இனிமையான உன்னை எப்படி
இரும்பாய் நிற்கும்
நான்கு சுவர் பள்ளிகளில்
யாரோ ஒருவரின்
பாட திட்டத்தால்
முடக்க முடியும் ?

தவழ்ந்து விழுந்து எழுந்து
சுவர் சார்ந்து ஊர்ந்து
விரல் பிடித்து
தனி நடையில் தன் காலில்
நிற்கும் உனக்கு
எதற்கு தன்னம்பிக்கை பயிற்சிகள் ?


சிரிப்புடன் மனிதர்களை அணுகும்
ஏகாந்தமாய் மனிதனை அணைக்கும்
சோகத்தில் மனிதனை தோள்சாய்க்கும்
உனக்கு கடவுள் சார் மதங்கள் எதற்கு ?

யோசித்து உன்
மன வீடு சேர்.



<u>பேசும் மனம்: 10</u>

அந்த மனிதர்கள்
ஆனந்தமாய் நடந்ததில்
வழியெங்கும் ஊனமாகி நிற்கும்
மணல் துகள்கள்,
மணல் துகள்கள்
எழுந்து நின்று
அந்த மனிதர்களை கண்களில்
பழிவாங்க முயற்சிக்கவில்லை...
மணல் துகள்களை
அகத்தில் கொண்ட
பரந்த பாலைவனம்
அந்த மனிதர்களை சுட்டெரிக்கவில்லை ...
காற்று ஒரு சிறு அசைவில்
அந்த மனிதர்களை
வழி தெரியாமல் செய்ய முடியும்
செய்யவில்லை....
இத்துணை மன்னிப்புகளுக்கு பின்
அந்த மனிதர்கள்
ஆனந்தமாய் நடந்துகொண்டிருந்தார்கள்
மணல் துகள்களும், பாலைவனமும், காற்றும் ...
இயற்கையின் நீட்சியாய் இளம் மன்னிப்பை
கொடுத்தவண்ணம் நிற்கின்றன...
இந்த இயக்கத்தில்
நீயும் நானும் ஒரு புள்ளி ...
நீயும் நானும் மன்னிக்கப்பட்டிருக்கிறோம்
நம்மை சுற்றி நடக்கும் மன்னிப்புகளின்
மிச்ச பிச்சையே நாம் ! புரிதல் தொடரட்டும்.
#நீயொன்றுமயோக்கியன்அல்ல



<u>பேசும் மனம்: 11</u>


மனைவியுடனான வாக்குவாதம்
குழந்தை தூங்கியதை
கவனிக்க தவறியது...

காலையில் எழுந்த குழந்தை
தந்தை தூங்குவதால்
சத்தமின்றி வெளியேறியது...

தாமதமாக எழுந்த கணவன்
மனைவியிடம் பேசாமல்
இல்லா குழந்தையை
நினைத்துக்கொண்டே
வெளியேறினான்.

அந்த வீடு
எல்லாவற்றையும்
கவனித்து
அமைதியான சாட்சியாய்
பெருமூச்சு விட்டு ---

<u>*பேசும் மனம் : 12*</u>




*ஆடைகளை கழட்டிவிட்டு*
*பிறந்த மேனியாய்*
*நகர ஆரம்பிக்கும்போது*
*எடையற்று அழகாய்*
*இருக்கின்றன எண்ணங்கள் !*

*எந்த மழைத்துளியும்*
*ஆடைகளை அணிந்து*
*பூமிக்கு வருவதில்லை ...*

*ஆடையற்ற மழைத்துளியை*
*ஆடையுடன் அணைக்கும் நாம்*
*அதன் உண்மை நிலையை*
*உணர்வதில்லை.*

## <u>பேசும் மனம் : 13.</u>



அந்த கானகம் முழுக்க
குடை பிடித்த மேகம்
குடைக்குள் மட்டும்
பெய்யும் மழை...
ஆட்கள் அற்ற கானகத்தில்
ஒற்றை பைத்தியமாய் நான் ..
அந்த குடைக்குள் மழையில்
நனைய
கொஞ்சம் இடம்
எனக்கும் கிடைத்தது
யான் செய் பாக்யமே !


<u>பேசும் மனம் : 14</u>

அந்த மௌன இடைவெளிகளில்
நீ என்னுடன் வாழ்ந்ததை
யாரிடமும் சொல்லாமல்
எனக்குள் நான்
பேசிய கணங்களை
கனவின் உயரமான தருணம்
என்று யாரிடம்
சொல்ல முடியும்
- உன்னை தவிர !




பேசும் மனம்: 15

பெய்த மழைத் துளிகள்
கால்களை நனைக்காமல் இருக்க
ஆடை உயர்த்தி நீ நடந்த போது
தெரிந்த கொலுசின் அலசலில்
மனம் எரிந்து குளிர்ந்தது
எதார்த்தம் நிறைந்த உன்
பார்வையை கவிதை எழுத திருடி
எழுதிய கவிதையை உனக்கும்
எனக்கும் இடையில் புதைத்து
எழும் ரோஜா செடியில் ...
என்றெல்லாம் எழுத ஆசைதான் ...
என் செய்வது .. ?
கண் முன் பணியும்,
பணி சார் வருவாயும் நிற்க ...
இதையெல்லாம் நான் எழுதினால்
பைத்தியம் என்று சொல்லாதோ உலகம் ?
உத்தியோகம் புருஷ லட்ஷணம்
என்பதால் எனக்குள் வாழும்
கவிதை எழுத முயற்சிப்பவனை
எழும்போதெல்லாம் கொல்கிறேன் !
#மாறுவேடம்பழகு



பேசும் மனம் : 16




வெளியே பெய்யும்
இரவு மழை .....
நீர் விழும் சத்தம்
மொட்டை மாடியில் ....

காலையில் பார்த்த
நனைந்த போர்வையை
போர்த்திய பிச்சைக்காரன்
என்ன ஆயிருப்பன் இப்போது
என எண்ண தோன்றியது

*<u>பேசும் மனம் 17:</u>*

மௌன மரங்களுக்கு மேல்
கீச்சுக்குரலில் ஒரு பறவை...
சுற்றிப் பார்த்து விட்டு
என்னை மீண்டும் பார்த்தது ...

அசையும் இலைகளுக்கு
அருகில் ஊர்ந்த பாம்பு...
பிரிந்த நாக்கினை
வெளிக்கொணர்ந்து
என்னை மீண்டும் பார்த்தது ...



அலையை உருவாக்கும் குளத்தில்
துள்ளிக்குதித்த மீன்
இரண்டாம் முறை துள்ளியபோது
என்னை மீண்டும் பார்த்தது ...
மரத்தில் மேல் ஏறும்
நேர்க்கோட்டு எறும்புக்கூட்டம்
சத்தம் கேட்டு நின்றபோது
என்னை மீண்டும் பார்த்தது ...
என்றெல்லாம்
என்னை கவனித்தவைகளை கவனித்த நீ
இந்த அடர் கானகத்தில் தனியாக
நான் நிற்கும்போது ...
என்னை மீண்டும் காணாதது ஏனோ ?


#மென்கேள்விகள்

*பேசும் மனம்: 18*


*வளைத்து வளைத்து*
*வீசும் காற்றில் ...*
*பேசிய இலைகளும்*
*பேசா பூக்களும்*
*தடுமாறும் நீர்க்குமிழ்களும்*
*தடுமாற்றமற்ற நெடு மரங்களும்*
*இருக்கும் இந்த கானகத்தில்*
*இந்த காற்றிற்க்கெதிறாய் நடக்கும்*
*என்னுடன் நடப்பதற்கு*
*ஏன் அஞ்சுகிறாய் ?*

*நிலை மாறும் உலகம்தான்*
*புறம் பேசும் மனிதர்கள்தான்*
*எதிர்பாரா சூழ்நிலைதான்*
*எதிர்மறை சவால்கள்தான்*

*அத்தனைக்கும் நடுவில்*
*அதே நிலையில் நிற்கும்*
*தாமரை இலை நீர்போல*
*நிற்கிறதோ என் எதிர்பார்ப்புகள் !*



*<u>பேசும் மனம் 19:</u>*



*உலகத்திற்கு கருப்பு குடையாய்*
*உலக வண்ணங்களுக்கு விலக்கு அளித்து*
*மனிதர்கள் ஒரு இனமாய்*
*மலரும் சத்தங்களுக்கு துல்லிய ஒலியும்*
*வாரி வழங்கி முகமற்று சிரிக்கும்*
*வன் போர்வையுடன் திரியும் இருளில்*
*நான் வெளிச்சமாய் இருப்பதை*
*உளமார உணரும் போது...*

*அருகில் இருக்கும் நீ*
*என்னை பார்த்து சிரிப்பது*
*அந்த வெளிச்சப்புள்ளியில்*
*மலரும் உற்சாகப் பூ !*


## பேசும் மனம்: 20

மண் எதிர்ப்புகளை
துகள்களாக்கி

தானே பாதையாய்
தானே முன்னேற்றமாய்
தானே அழிக்கும் சக்தியாய்
தானே உதவும் யதார்த்தமாய்

வாழ்ந்து மடிகிறேன்
என்னை விட பெரிய
என் பகுதியில் ...
என்னை ஆறு என்றும்
அழைக்கலாம்
என்னை இப்போதிருக்கும்
நானாகவும் அழைக்கலாம் ...
வாழ்க்கை முடிகிறது

கனவு ஆரம்பிக்கிறது



*பேசும் மனம் : 21*

*களிக்கும் இரவின் பூமியை*
*கவனித்துக்கொண்ட பின்*
*கதிரவனின் வருகையை*
*கவனமாய் எதிர்பார்த்து, வந்த பின்*
*முழுமையாய் பொறுப்பை ஒப்படைத்து ....*
*மீண்டும் ஏதோ ஒரு பொறுப்பை*
*எங்கோ எடுத்துக்கொள்ள*
*எந்திரத்தனமாய் தயாராகும்*
*- நிலா.*



பேசும் மனம் 22 :

தன்னிடமிருந்த மொத்த நீரையும்
முழு மனதோடு கொடுத்துவிட்டு
எதிர்பார்ப்பில்லாமல்
அமைதியாய் நகர்ந்து செல்லும்

அந்த ஆற்றினை வியப்போடு
நான் பார்ப்பதை
வியப்போடு பார்த்தன
அதேபோல் கொடுத்துவிட்டு
எதிர்பார்ப்பில்லாமல் வாழும்

மேகமும் காற்றும் மழையும் ... !




*__பேசும் மனம்: 23__*

அந்த கானகத்தின்
கனத்த மௌனத்திற்கு
நன்றி மறந்த
மனிதர்களே காரணம் என்பது
வெட்டிப்போட்ட மரங்களின்
குருதியில் எழுதப்படுகிறது ....

காற்றும், வான்வெளியும்,
சமகாலத்து மரங்களும்
பேச முடியா சாட்சி ...

இயற்கை என்னும் நீதிமன்றம்
எழுதப்போகும் தீர்ப்பு
என்னவோ
மன்னிப்பு மட்டுமே !




__பேசும் மனம் : 24__

*உயரமாய் நின்ற*
*அந்த ஒற்றை பனை*
*தனிமையை தொலைத்தது …*
*அதன் நிழலில்*
*அவள் நின்ற போது !*



பேசும் மனம் : 25

நகரும் பொருளீட்டு
நரக வாழ்வில்
மற்றதை புறம் தள்ளி
மனதிற்கு அருகில்
மனிதம் கொணர்ந்து
வாழும் போது ...
என்னருகில் இருந்தால்
நீயும் நானும்
பிறர்க்கு புரியா
மொழி பேசும்
வித்தியாசமானவர்கள் !




*பேசும் மனம் : 26*



வெண் ஓட்டை
உடைத்துக்கொண்டு
வெளிவந்த
நம்பிக்கை..
கை கால் முளைத்து
நகர ஆரம்பித்தபோது..
பெயரற்ற அந்த
கோழிக்குஞ்சை
தாய் தடவி
அணைத்தது !


<u>பேசும் மனம் : 27</u>

எழுத எழுத
என் எழுத்துக்கள்
யதார்த்தமாய் கரைந்தன..
படிக்க படிக்க உன்
பிம்பங்கள்
பார்வையில் இருந்து
மறைந்தன...



புதிய நீயும்
புதிய நானும்
பிரியா உணர்வுகளில்
எழுதப்பட்ட
எழுத்துக்களால்
இணைகிறோம்...
புரியா உலகம்
புத்தகம் படிப்பதை
பற்றி இன்னமும்
பேசிக்கொண்டிருக்கையில்

அதே புத்தங்கங்களை
அணு அணுவாய் தின்ற
அசாத்திய நிம்மதியில்
ஆழ்நிலை மெய் கலப்பில் ...
தினம் தினம் பிறக்கும்
நாம்
மற்றவர்களுக்கு மனிதர்கள்
நமக்கு....
நெகிழும் ஆன்மாக்கள். மீண்டு கலப்போம் ...
மீண்டும் கலப்போம்.....!



<u>பேசும் மனம் : 28</u>

புதுமைப்பெண்கள்
இனியெல்லாம் மறைமுக
சேலைப் போர்களை
அனுமதிக்கப்போவதில்லை ...


கணினி கலப்பில்
அறிவு விரல்களின் அருகில்
துணிச்சல் தட்டச்சில்
நடத்தப்படும் உரிமை போரில்

கிழித்த கோடு
அதை தாண்டுவது
என்றெல்லாம் ஒன்று இல்லை...
இனியெல்லாம்
அழிக்கப்படும் கோடுகளே !

<u>பேசும் மனம் : 29</u>


வெற்றியின் போதை
புத்தியின் மயக்கம்
செருக்கின் திமிர் நடை
பணத்தின் போலி மதிப்பு....

எல்லாம் கலந்த நீ
என்னுடன் பயணிப்பதால்
எப்போதும் பயணிப்பதால்
சக சாதாரண
மனுதனாகிறாய்...
என் பெயர் இயற்க்கை
என சொல்லவும் வேண்டுமோ ?




## <u>பேசும் மனம் : 30</u>

ஏன் என்ற கேள்விக்கு
உன் மௌனம்
பதில்.
மீண்டும் கேள்வி கேட்க
விரும்பா நிலை கொள்ளும்
நான் ...
சூழ்நிலை
அழகாகிக்கொண்டே
செல்வது
உனக்கும் எனக்கும்
இடையில் யாருக்கும்
தெரியாமல் வளரும்
ஆல மர விழுதை
குறிக்கிறதோ ?
தன்னிலை புரிதல்களும்
ஆனந்தமே !



பேசும் மனம் : 31

அழையா அலையா கண்களும்
கருவிழி பார்க்கும் பார்வையும்
ஈர நெஞ்சினில் தெளிவும்
தேர்வாகும் வார்த்தையில் நேர்மையும்
சொல்லா வாக்கிலும் மனம் சாட்சியாய்
உன்னுடன் நடக்கும் என்னுடன்
உளமார நடக்க உனக்கும் ஓர்
உள் நற் தகுதி வேண்டும்...
இல்லை எனில்
இவ்வளவு நாள் நடந்ததே
இப்புவியில் பெரும் வரம் ...
நினைவில் கொள் !



#வேடிக்கைமனிதரைப்போலவீழ்வேனென்றுநினைத்தாயோ

*பேசும் மனம் 32:*

குளத்தில் விழும் துளி
பொது
பூவின் இதழில் விழும் துளி
தனி
குளத்தில் பூவில் இதழில்
விழும் துளி
பொதுவில் தனி....

வாழ்
பொதுவில் தனியாக
வாழ்.



பேசும் மனம் : 33

குடைக்குள் மகளை
கொண்டு வரும் தாய்
குடைக்கு வெளியே
நனையும் தந்தை
எதுவும் தெரியாமல்
சிரிக்கும் குழந்தை ..

மழையின் இந்த
வாழ்க்கை முறையே
பிரச்சினைகளின் போதும்.... !



பேசும் மனம் : 34

யாதும் ஊரே
என திரியும்
அந்த பறவையை
எந்த மர நிழலாலும்
ஈர்க்க முடியவில்லை ..
பறவைக்கு
மீண்டும்
பறக்கும் வரை மட்டுமே
மர நிழல்கள் !



<u>பேசும் மனம் : 35</u>

சமமாய் பெய்யும்
மழையில்...
நனைவதில்
உச்சந்தலை
முதலிலும்
உள்ளங்கால்
அடுத்ததுமாய்
படிகளை அமைத்து
வாழ்க்கை
விளையாடுகிறது !



**<u>பேசும் மனம் 36 :</u>**


*நகர்ந்த*
*வாழ்வை*
*மறைந்த*
*உயிர் தடயத்தை*
*முன்னேற்றம் கண்ட*
*பொருளீட்டலை*
*இறந்த*
*பெற்றோரை*
*நினைவூட்டுகின்றன ...*
*திறக்கா கதவுகள் !*



## *பேசும் மனம் : 37*

வல்லமை வேண்டும்
நல் வரம் வேண்டும்
புரிதல் நட்பு வேண்டும்
மென் சமூகம் வேண்டும்
உதவும் எண்ணம் வேண்டும்
எத்தனை வேண்டும்
நான் கேட்பேன் ?


அத்தனைக்கும் பதில்
உள் கடக்கும் மனமும்
அந்த உள் உலகத்தில்
பிரயாணிக்க துணையாய் நீயும் ...
போதும் எனக்கு
என்று சொல்வேன்
பொய்கள் எதுவும்
இல்லா என் உலகில் !
வசப்படுவோம் வா.



<u>பேசும் மனம் : 38</u>

தோல்விகளும் இல்லை
வெற்றிகளும் இல்லை
பாடங்களே
பயிலரங்கங்கள்
எனக்கு

இது புரியாது
போட்டியிட முனையின்
மாந்தர் வெற்றி பெறுவர்
பாடங்களை சேகரிக்கும்
என் குணம்
என் பலமாகும்
மீண்டும்
எப்போதும் !



பேசும் மனம் :39


பிறரை படித்து
பார்த்த அனுபங்களில்

பழுதுதர கற்று
படிப்படியாக

பெரும் தடம் பதிக்கும்
பலா மனிதர்களை

ஓரிரவில் முந்த
ஒரு நீள் முயற்சி

எடுக்கும் பிரதி மனிதர்கள்
எக்காலத்திலும் வெல்வதுண்டோ ?
மூடமை வெல்ல நினைப்பதும்
அனுபவம் நின்று கொள்வதும்
கால யதார்த்தமே !




<u>பேசும் மனம் : 40</u>




ஒரு நிஜ யோகியின்
கோபம்
தேவையற்றவைகளை
எரிக்கக்கூடும்
நின்று கொள்
நிதானம் கொள்
இல்லை எனில்
நிஜ யோகியிடம்
மன்னிப்பும் கேள்...
பிழைத்துக் கொள்வாய்..
நிஜ யோகி என்னும்
இயற்கையே..
எதிர்கால மன்னிப்பை
இந்த பதர்கள் சிலருக்கு
வழங்கும் !

பேசும் மனம் : 41

இயற்க்கை
ஊமையும் அல்ல
நான்
செவிடனும் அல்ல
அது முனகுவது
என் காதுகளில் கேட்கிறது...
அருகில்
வாயசைத்துக்கொண்டிருக்கும்
உங்களின்
மூடப்படா காதுகளில்
இயற்க்கையின்
முனகல்கள் கேட்கிறதா ?
இப்போது தான்
பூ ஒன்று மலர்ந்தது ..
அழகான இசையுடன் !



<u>*பேசும் மனம் 42:*</u>




*வண்ணத்து பூச்சிகளின்*
*ரீங்கார பாடல்களின் முன்,*
*பனிச்சாரலின்*
*போர்வையால்,*
*நரம்பு அதிரும்*
*குறை வெப்பத்தில்,*
*தென்றலின் தேரில்*
*ஒற்றையாய் நடக்கும்*
*என்*
*திடத் தோளில்*
*சாய்ந்து நடப்பதை மறந்து*
*என்ன செய்கிறாய் அங்கு ?*

*- இப்படிக்கு இயற்க்கை.*


*பேசும் மனம் 43 :*

பேசா உதடுகளின்
பெருகும் அழைப்புடன்
உருவமற்று பயணித்து
காற்றுடன் கலந்து
ஆன்மாவில் புதைந்து போகும்
அதனுடன்
கடைசியாக எப்போது கலந்தாய் ..
கேள்வி கேட்கும் இசை !



*<u>பேசும் மனம் 44 :</u>*

*தூங்கா விழிகளில்*
*தெரியும் இலக்கு*
*தூங்கி எழுந்த*
*பின்னும் காட்சியாய் ...*



*ஒன்றை அடையும் வரை*
*ஒற்றை நோக்கமாய்*
*ஒழுங்கு எண்ணங்களில்*
*பயணிக்கும் மனிதனை*
*படி...*
*பாடமாக்கு...*
*படிக்கட்டுகளாய்*
*முன்னேறு*

*இட வல*
*பார்வை சிதறல்கள்*
*விழிகளின் எல்லைகளுக்குள்*
*விழட்டும்...*

*சிதறல்களும்*
*உரமாகட்டும்*
*நோக்கங்கள்*
*உயரமாகட்டும்...*

*விழும் வியர்வைக்கு*
*உலகம் பதில்*
*சொல்ல*
*நீ அமைதியாகி சிரித்து செல்... !*

# பேசும் மனம் 45:

சூடும் மாலைகள்
ஓர் மாலைக்குள்
வந்து விடா

சூடா மாலைகள்
எந்த நேரத்திலும்
வந்து விழும்

உன் வேலையில்
கவனம் கொள்
உலகம் உன்னை
உருவமாக்கும் ...

உன்னிலிருந்து
வெட்டி எறியப்படும்
செதில்கள்
சூடா மாலைகளை
எடுத்து
இயங்கட்டும்

உன் பயணம்
வசப்படுத்தும்
உலகம்
புரிய வாய்ப்பில்லை
யாருக்கும்
உன்னை தவிர !




<u>பேசும் மனம் 46 :</u>

திடீரென்று இறந்த
பெயர் தெரியா
நட்பு
எனக்குள் ஏற்படுத்தும்
அதிர்வுகளே
நாம் அனைவரும்
பின்னப்பட்டிருக்கிறோம்
என்பதன் சாட்சியோ ?

மனது வலிக்க
நிலைக் கண்ணாடியில்
முகம் பார்த்த வண்ணம்
உள் எழும் கேள்வி....

வாழ்வதற்கா சாகவேண்டும் ?





<u>பேசும் மனம் 47:</u>

சட்டென பெய்யும் மழை
எங்கே இருந்தாய்
இவ்வளவு நாளாய்
வினவுக்கு
துளிகளின் சத்தங்களில்
மௌன பதில்...

ஏன்
எதற்கு
என்கிற
வாழ்க்கை நிகழ்வு
மௌன புள்ளியாய்
காலப் படகில் ....


எதையும்
இதையும்
எப்போதும்
இப்போதும்
பாட படிக்கட்டாக
பார்க்கும் திறனுடன்
எனது எண்ணமும்
அதன் நேர்மறை பிரதிநிதியாய்
நானும்.





<u>பேசும் மனம் 48 :</u>


நம்பிக்கைகள்
துவண்டு நிற்கும்போது
துளிர்க்கும்
இன்னொரு நம்பிக்கை
அத்தனை நம்பிக்கைகளையும்
உயிரூட்டுவதை விட
வேறென்ன அதிசயம்
இந்த உலகில் இருக்க முடியும் ?



<u>*பேசும் மனம் 49:*</u>

*ஆற்றின் நடுவில்*
*அவன் தடுமாறுவது*
*அகிலத்திற்கு தெரியாமல்*
*நீச்சல் அடிக்கும்போது*
*நீர் வரமாய் வந்த படகு*
*அவளால் அனுப்பப்பட்டதை*
*அவன் உணர்ந்த போது ...*
*சுவாசத்தை ஒரு வினாடி நிறுத்தி*
*சுத்தமான நன்றி செலுத்தி*
*மீண்டும் சுவாசிப்பை*
*தொடர்ந்தான் !*

*<u>பேசும் மனம் : 50</u>*



அவன் போட்ட கணக்குகள்
அத்துணையும் தவறானபோது
விடைகளை திருத்த சொன்ன
விஷ மனிதர்களை பார்த்து
கள்ளமில்லா சிரிப்புடன் ...
கணக்குகளை அவன்
குறிப்பாய் திருத்த ஆரம்பித்தான்
பழைய விடைகளுக்கு
புதுக் கணக்குகள்....
வாழ்க்கை வித்தியாசமானது !

பேசும் மனம் 51:

இயற்க்கையுடன் வாழும்
எனக்கென்று
ஒரு
கீதையோ
பைபிளோ
குர்ரானோ
தேவை இல்லை...
மனிதம்
நிறைந்திருந்தால் நீ
மட்டும் வா !



__*பேசும் மனம் 52:*__

*ஒவ்வொரு முறையும்
இயற்கையின்
இணையற்ற
தூண்டில்களில்
சிக்கி கொள்ளும்
அறிவற்ற மீன் நான் ...*



*அறிவுடன்
இயற்கையில்
இருந்து விலகும்
அனைவரையும்
இழப்பதில்
எனக்கு
எள்ளளவும்
வருத்தமில்லை !*

பேசும் மனம் : 53

மூங்கிலில் விழும்
காற்றின் ஓசையில்
நீயும் நானும்
பேசிக்கொள்வது
கேட்காது போகும்...
அவ்வளவு மெல்லிய
அஹிம்சை பேச்சு
நம்முடையது !



*பேசும் மனம் : 54*

*தலையில்
நிற்கும் கிரீட பெருமையும்,
தோளில் சூடிய
பூமாலையும்.....
என
பெருமிதமாக
திரிவதை விட
குருதி வழியா
மனசாட்சியை
முன்னிறுத்தி
உள்ளதை சொல்லி
உளமார
முன் நடப்பதை
விரும்பும்
எளிய
மாணவன்
இவன்.*



பேசும் மனம் : 55

எண்ணங்களில்
இருக்கிறது
சொர்க்கத்தின்
நரகத்தின்
வாசற்படிகள் ...
முகூர்த்த
நேரங்களிலோ
கருவறைகளிலோ
அல்ல !




பேசும் மனம் : 56

ஐம்புலன்கள் செய்யும்
கள்ள மாயங்களில்
குப்புற விழும்
குபேர வயதுகளை
கடந்த பின் தெரியும்
ஒரு
காட்சி பிழை அற்ற
மனம் கவர் உலகம் !



*பேசும் மனம் 57 :*

நூறு ஜென்மம்
சேர வேண்டியதில்லை ...
ஒரு ஜென்மம்
ஒரு மனதின் சாட்சி
ஒரு சொல்
ஒரு வாக்கு
ஒரு முன்மாதிரி
என வாழ்ந்து மடியலாம் ..
நூறு ஜென்மத்திற்கு
அது தொடர்வது
அவரவர் விருப்பம் !



## பேசும் மனம் : 58

இரண்டு விழிகளும்
தூங்கி எழும்போது
தெரியும் புது உலகில்
நேற்றைய
துக்கங்களும்
சாதனைகளும்
தெரிந்தால்
இன்னும் விழிக்கவில்லை
எனப் பொருள் கொள் !



பேசும் மனம் : 59

ஓய்வெடுத்த இயக்கம்
கண் விழித்து
வயிறு அசைய
தோள்கள் நகர
கால்கள் குதிக்க
மார்பு மூச்சு வாங்க
செய்யும் உடற்பயிற்சியில்
விழித்துடு ...
முதுகெலும்பு
நிமிர் !




பேசும் மனம் 60 :

நரம்புகள் மீட்டப்பட
நிலைக்கும் அவற்றின் குரலில்
நயந்து கேட்கும் இசை...
ஆனந்த குரலா
அழுகை குரலா
என்பது
வாசிக்கும்
விரல் சார்ந்தது !



## <u>பேசும் மனம் 61 :</u>

வெளிச்ச பூக்களை
அடையாளம் காட்டும்
இருளில் உன்னை
சந்திக்க விழைகிறேன் ...
என்னை
உள்ளிருந்து புறமாய்
வெளிச்சமூட்டும்
உன் அழகில்
மயங்கும் நான்
மனம் என்ற
பெயர் கொண்ட நீ !




## பேசும் மனம் 62 :

இருள் எழும்ப துவங்கும்
இள மாலை வேளையில்
பெயர் தெரியா
பறவை ஒன்றின்
ராகம் தெரியா கானத்தில்
ரக இனம் புரியா மகிழ்வில்
பக்கத்தில் இருந்து நீ
பேசிய நேர்மறை
எண்ணங்கள்
ஞாபகத்தில்...
ஞான உலகில் இப்போது
எங்கே இருக்கிறாய்
நீ ?
என் குரல் உனக்கு
கேட்கிறதா ?



## பேசும் மனம் 63:

ஏதோ ஒரு கிளையில்
ஏதோ ஒரு பறவை
ஏதோ ஒரு ராகத்தில்
எசப்பாட்டு இல்லாமல் பாட
எனக்கு
என் கடந்த கால நாயகியின் நினைவு
ஏன் வர வேண்டும் ?
எங்கோ தொலைந்த புகைப்படம்
எப்படியோ மீண்டும் கிடைத்த
எஜமான மகிழ்வு !



பேசும் மனம் 64 :

வாழ்க்கையின்
வாய்ப்புகளில்
வளமான சிந்தனையை
வளர்க்கா மனிதர்கள்
வீழ்ச்சியின் இறக்கைகளில்
விழாமல் அமர்ந்து
வெற்றி பெற்றதாக
வெறும் கனவில்
வாழ்ந்து மடியும்
வெற்று மனிதர்களே !




## பேசும் மனம் : 65



கட்டிப் பிடித்த
கள தலையணையின்
கிணற்று நீர் சூடு
கன்னத்தில் அறைந்து
கன கேள்வி கேட்டது ...
கற்பனைகள் முப்பொழுதும்
கட்டிக்கொள்ளும்
கனவு வாழ்க்கையா
கண்ணா உன்னுடையது ?

*பேசும் மனம் 66 :*

ஆராரோ ஆரீராரோ
ஆடும் தொட்டிலில்
ஆழ்ந்த தூக்க குழந்தை
அனுபவமற்ற கேள்விகளை
அள்ளி எறிகிறது...
அத்துணை கேள்விகளும்
ஆழமான ஒரே கேள்வியாய் ..
ஆடும் இந்த வாழ்வில்
ஆடும் நீயும் சேர்ந்து
ஆடினால் ?
ஆழ்நிலையில் யோசி மனிதா.




பேசும் மனம் 67 :

எல்லைகள் இல்லா
சட்டங்கள் இல்லா
இலக்குகள் இல்லா
கடந்த காலங்கள் இல்லா
உறவுகள் இல்லா
குடும்பம் இல்லா
இந்த கனவுலகில்
உன்னுடன் பயணிக்கிறேன்
நம்மை சுற்றிய போர்வை
என்ன நினைக்கும்
என்ற கவலைகள் இன்றி !



<u>பேசும் படம் 68 :</u>

நீலப்
போர்வையின்
மௌனம் ...
எனக்கும்
போர்வைக்குமான
இடைவெளியில்
என் மூச்சுக்காற்றின்
எதிர்ப்பற்ற அனுமதியுடன்
வாழ்கிறது
யாருமற்ற இந்த
இடைவெளியில்
யான் என்னை அணைத்து
துயிலை நோக்கி ...
பயணிக்கிறேன்.



## <u>பேசும் படம் 69:</u>

போர்வையின்
முனகல்கள்
எனக்கு கேட்கிறது...
என் மனசாட்சியின்
இரவு முனகல்களையும்
போர்வை கேட்டிருக்குமோ ?
கேட்கட்டும்...
அப்படி எனில்
எனக்கு ஒரு நல்ல நட்பு
கிடைக்கக்கூடும் !



*பேசும் மனம் 70 :*



மொத்த உடலையும்
இயற்க்கை
குத்தகைக்கு எடுத்து
என்னை
உள்ளே அனுப்புகிறது...
காலையில் என்னை
எழுப்பக்கூடும் ...
அதுவரை
எனக்குள் இருக்கும்
அகிலம் என்னை
வரவேற்கிறது...
நான் அற்ற உலகில்
மிதக்கும் நான் !

*<u>பேசும் மனம் 71 :</u>*

*பெய்த மழையில்*
*பெருமளவு மனிதர்கள்*
*பொய்த்து காணாமல் போக*
*பைத்திய மனிதனாய்*
*போதுமளவு நனைத்து*
*பொறுமையாய் நிற்கிறேன் ...*
*போதாது இந்த மழை அணைப்பு !*



<u>பேசும் மனம் 72</u> :

*வெளியில் பெய்யும்*
*வெப்பமற்ற மழை*
*வாகனத்திற்குள்*
*வெப்ப அளவை*
*கூட்டுவதன்*
*மாயம் நீயோ*
*மருந்தும் நீயோ*
*இயற்க்கையே !*




__பேசும் மனம் 73 :__

தேங்காய்ப்பூ
தூரல்களின்
இடையே உன்
இரு விழிகளை
காண்கிறேன்
கவர்கிறேன்
கதகதக்கிறேன்
ரசனை குற்றமில்லை
ரசிகனும் அப்படியே !



## பேசும் மனம் 74 :

நான்கு சுவர்களும்
கொஞ்சம் தூக்கமும்
ஒரு கைபேசியும்
நிறைய புத்தகங்களும்
வியர்வை உடற்பயிற்சியும்
நகரும் வாகனமும்
பிரதிபலிக்கும் புகைப்பட கருவியும்
வெளியில் மழையும்
வயலில் பசுமையும்
கைநிறைய எழுத்தும்
மனம் நிறைய கற்பனையும் ....
வாழும் வாழ்வு
பல சபல எதிர்ப்புகளுக்கு
இடையில் நிகழ்கிறது...
தினம் தினம்
என்ன தவம் செய்தனை
இப்படி ஓர் வாழ்விற்கு !



*பேசும் மனம் 75 :*

*காரணங்கள்*
*எப்போதும்*
*நியாயமற்ற*
*காரணமற்ற*
*மனசாட்சியற்ற*
*தன்மையில்*
*வாழ்ந்து*
*கொண்டே*
*மனிதர்களை*
*கடக்கின்றன.*



__*பேசும் மனம் 76 :*__

*விழியின் அசைவில்*
*விழும் பிம்பங்களும்*
*அசைந்தாடுமோ ?*



<u>பேசும் மனம் 77 :</u>

ஒவ்வொரு வருடமும்
எதிர்காலங்களை
உருவாக்கிவிட்டு
நிகழ்காலத்தில்
வாழ்ந்து முடிகின்றன ...
அரசு பள்ளிக்கூடங்கள் !



## <u>பேசும் மனம் 78 :</u>

கடைசியாய்
என்னை வந்து
சந்தித்தது
எப்போது
என்ற கேள்வியுடன்
அந்த பள்ளிக்கூடம்
தன் வாழ்க்கையை
முடித்துக்கொண்டது.



*பேசும் மனம் 79 :*

*ஒவ்வொரு வகுப்பிற்குமாய்*
*அவன் முன்னேற*
*ஒவ்வொரு செங்கல்லாய்*
*தன்னை இழந்த*
*அந்த பள்ளிக்கூடம்...*
*நமக்கெல்லாம்*
*இன்னொரு தாயோ ?*



__*பேசும் மனம் 80:*__

*என்னை தட்டும்*
*எதிர்மறை உளிகள்*
*எட்டுப்பக்கமும் தோற்க*
*எம் நெஞ்சு நிமிர்த்தி*
*எழுவதை சொல்லும்*
*எம்*
*எதார்த்த தன்னம்பிக்கை !*



__பேசும் மனம் 81:__

உள்ளொன்று
புறமொன்று
பேசும்
நாக்கு
உன்னிடம் இருக்கும் எனில்
உன் பேச்சுகள்
என் காதில் விழாதது
அதிசயம் இல்லை !



## பேசும் மனம் : 82

சகோதர ஈரம் இல்லை எனில்
சரியாக எரித்துவிடும்
சமத்துவ நேர்மையில்
சரிந்து நிற்கிறேன் உன் முன்
வாழ்ந்தால் உன்போல்
வாழவேண்டும்
நெருப்பே !



பேசும் மனம் : 83

இறப்புக்கும்
இருப்புக்கும்
இடைப்பட்ட
இதயம் நகரும் பாலமாய்
இருந்து கரை சேர்க்கும்
இந்த மருத்துவ ஊர்திக்கு
இணை வாகனம்
உலகில் உண்டோ ?




__பேசும் மனம் : 84__

உள்ளுக்குள் வரும்
உருவமற்ற நீ
உயிரின் நரம்பாக
உள்ளிருந்து எதிரொலிக்கும்போது
உற்சாக உடல் இசையும்
உன் அதிர்வுகளால் தான்
உனக்கு இசை என்ற பெயர்
உலகம் முழுக்க
இடப்பட்டதோ ?



## <u>பேசும் மனம் : 85</u>

அடையாளம் இழந்தாய்
அசையா இருப்பு இழந்தாய்
ஆடை மேல் பற்று இழந்தாய்
ஆன்மாவின் கறைகளை இழந்தாய்
அத்துனை பொருள்களுடனும்
அகம் கலக்காமல் வாழ்கிறாய்
ஆரம்ப புள்ளி மறக்கிறாய்
ஆதாரப் புள்ளியை நகர்தல் என்கிறாய்
ஆக உனக்கு சாது எனப்
பெயரிட்ட
அகிலம் சரியே என
நிரூபிக்கிறாய் !



## பேசும் மனம் : 86

வார்த்தைகளை தேடாமல்
வசியம் வைத்தாற்போல்
வஞ்சகம் இல்லாமல்
வகை வகையாய்
வரிகளின் தூரிகையால்
வள இதயங்களை
வசீகரிப்பதால் நீ என்றும்
வாழும் கவிதை ஆகிறாயோ ?



பேசும் மனம்: 87

மூங்கிலுடன் நீ கொண்ட
முதிர் கலப்பில்
மென்மையாய் உருவான
மாதிரிக்கு குழல் இசை என்று
மாயப் பேரினை அளித்து
மறையும் நீ
முன்னே வா ...
மூச்சுடன் கலந்து விடு !



பேசும் மனம் : 88

எங்கோ புறப்பட்டு
வார்த்தைகளாய் உருமாறி
ஒப்பனை அற்று
படிப்பவர் உள் விழுந்து
இன்னொரு இடத்தில்
இருப்பு கொள்ளும்
உனக்கு
என்ன பெயரிடுவது
என யோசித்து
எழுதுகிறேன் இக்கவிதை !



__*பேசும் மனம் : 89*__

*நாளும் மாறும்*
*உண்மை உள்ளாடைகள்*
*பொய் மேலாடைகள்*
*தோற்ற மாற்றத்தின்*
*தொன்று தொட்ட அடிப்படை*
*நீ என்பதில்*
*இன்னொரு கருத்து இல்லை*
*என் 'செய்தி'யே !*



பேசும் மனம் : 90

உடல் சாரா
உறவு தரும்
உற்சாகத்தில்
உள்ளிருந்து
உலகம் புறப்படுகின்றன
உன் என் நம் கவிதைகள்
உம் வரவினில்
உளப் பற்று வைக்கும்
உனக்கான எம் மூச்சில்
உள் கலந்து உயிர் செல்.



பேசும் மனம் : 91

ஏகாந்த எண்ணங்கள்
அமைதியாய் அடை
காத்ததில்
காகித முற்றத்தில்
கருவிலிருந்து வெளிவந்த
கவிதைக்குஞ்சுகளை
கண்திறந்து ரசிக்கும்
நீயும் நானும் நாமும்
ஒரே குலம்.



பேசும் மனம் 92:

விளக்கம் சொல்ல
தேவையற்ற
நீயும் நானும்
விழிகளால் பேசுவதை
புரிதலற்ற உலகம்
வார்த்தைகள் கொண்டு
வடிவமைக்கும்...
அதே நேரம்
மௌன ஊஞ்சலில்
அருகாமை தோள் சாய்ந்து
இடைவெளியுடன் பயணிக்கும்
நாம்.




*பேசும் மனம் : 93*

இரவில் தெரு
வரிசையாய் விளக்கொளி
தூர வெளிச்ச நகர்வு
பரபரக்கும் மனம்
நகர்வின் நெருக்கம்
மௌனத்தின் கற்றல்
அருகில் நீ
இத்தனையும் ஒரு
பெருமழைக்கு நடுவில்
என்
குடைக்குள்ளிருந்து !



பேசும் மனம் 94 :

நேற்றைய பிம்பங்களை
அழித்துவிட்டு
புதிய பிம்பங்களின் மேல்
கயிற்றில் நடப்பது போல்
ஆரம்பமாகும் வாழ்க்கை
அன்றிரவே முடிந்துபோகும்
என்ற பேரறிவு
உன்னுள் இருக்குமாயின்
தன்முனைப்பு எனும்
தலைக்கன சதவிகிதம்
எள்ளளவும் இருக்க
வாய்ப்பில்லை !



<u>*பேசும் மனம் : 95*</u>

*நீ எவ்வளவு*
*நியாயம் சொன்னாலும்*
*நல்லது கெட்டது*
*தெரிந்தாலும்*
*இந்த உலகம்*
*யதார்த்தத்தின் பக்கமே*
*நின்று நகரும்*
*- சில காலங்களுக்கு.*



பேசும் மனம் 96 :

சொல்
விருப்பம்
சக்தி
எதிர்பார்ப்பு
அதிகாரம்
அனைத்தும்
ஒரு எல்லைக்குட்பட்டது
- உன் மனதிற்கு வெளியே !



பேசும் மனம் 97 :

ஒரே ஒரு தவறை
செய்துவிட்டு
வாழ்க்கை முழுக்க
நான்கு சுவர்களுடன்
வாழ்வதும்...
தவறுகளை மறைத்து
கபட வேடம் அணிந்து
நான்கு சுவர்களுக்கு
வெளியில்
வாழ்வதும் ...
ஒன்றே !




*பேசும் மனம் 98 :*

கண்கள்
எடுக்கப்பட்ட பின்
புதைக்கப்பட்டேன்
புதைத்த இடத்தை
உன் கண்களால்
பார்க்கிறேன் இப்போது ..


நீ அழுது சொல்லும்
நன்றியை
என் கண்களால்
நான் காண்கிறேன்
இறப்பிற்கு பின்னும்...

#கண்தானம்செய்



பேசும் மனம் : 99


அழகான அநாதையாய்
நீ நின்ற போது
குருதி தொடர்பற்ற நான்
அநாதையை அகற்றி
உன்னை கரம் பிடித்தேன்...
உலகம் என்னை
தத்து எடுத்தவன் என்றது
நீ என்னை
அப்பா என்றழைத்தாய்
நம் வாழ்க்கை
தொடங்குகிறது.



## பேசும் மனம் 100 :

இடது மார்பும்
வலது மார்பும்
இணைந்திருக்கும் மன
சாட்சிக்குள்
இணையாய் நீ வர
உன் மன சாட்சியுடன்
இரு பேசு யோசி நட
ஒரு அலைவரிசை நம்மை
இணைக்கும் மாயம்
நம் சாட்சிகளுக்கு தெரியும்.






**ஜெயசேகரன் ஜென்**